பிரிவுகள் 2 முதல் 19 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே,

"தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் ர்பரவை சட்ட முன்வடிவு எண் 22/1974) நிறைவேற்றப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(ஊ) தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு, இந்து சமய-அறக்கட்டளைகள் (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1974.)

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டப்பேரவை) சட்ட முன்வடிவு எண் 23/1974) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 22/1959) 23-வது பிரிவு, சமயக் கட்டளைகள் சம்பந்தமாக, பொதுவாக மேற்பார்வையிட்டு நிர்வகிக்கும் அதிகாரத்தையும், சமயக் கட்டளைகளின் சீரான நிர்வாகத்திற்கு அவசியமெனக் கருதக்கூடிய ஆணைகளைப் பிறப்பிக்கும் அதிகாரத்தையும் இந்து சமய அறக்கட்டளை ஆணையருக்கு வழங்குகிறது.

மேற்சொன்ன சட்டத்தின் 23-வது பிரிவின்படி, கோயில்கள் இணைப்பு குறித்து ஆணையர் பிறப்பித்த ஆணைகளின் செல்திறன் சம்பந்தமாக, 3212, 3213/1972-ம் எண் ரிட் மனுக்களில் உயர்நீதி மன்றம், பிறவற்றிற்கிடையே மேற்சொன்ன பிரிவு, அறக்கட்டளைகளுக்கு மட்டுமே பொருந்துமே தவிர

---

* 9—4—1974 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

1974 ஏப்ரல் 15] [திரு. மு. கண்ணப்பன்]

சமய திருவனங்களுக்குப் பொருந்தாது என்று தீர்ப்பு வழங்கியுள்ளது. ஆகவே, மெற்சொன்ன பிரிவின் வரம்பிற்குள் கோயில்களையும் அவற்றைச் சேர்ந்த குறிப்பிட்ட கட்டளைகளையும் சேர்த்துக்கொள்ளும் வகையில், 23-வது பிரிவைத் திருத்துவது அவசியமெனக் கருதப்படுகிறது. மேற்சொன்ன நோக்கத்தை அடைய இந்தச் சட்ட வரைவு விழைகிறது. இம் மாமன்றம் இதனை ஏற்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2, பேரவையில் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே,

"தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு, இந்து சமய-அறக்கட்டளைகள் (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1974) நிறைவேற்றப்பட வேண்டும்".

என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இந்த அளவோடு முடிவுற்று நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை மாலை 5-23 மணியளவில் ஒத்தி வைக்கப்பட்டது.

8. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

239. Notification issued with G.O. Ms. No. 2797, Rural Development and Local Administration, dated the 18th December 1973, in regard to variation to the list of open spaces and parks in the area within the jurisdiction of the Thanjavur Municipality. [(Laid on the table of the House under section 14 (3) of the Tamil Nadu Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959 (Tamil Nadu Act 26 of 1959)].

240. Notification issued with G.O. Ms. No. 5435, Revenue, dated the 4th September 1973, in regard to an amendment to the Tamil Nadu Cultivating Tenants Arrears of Rent (Relief) Rules.